# உறையிலிடாதவர்

முதுமுனைவர் ம. அ. வேங்கடக்ருஷ்ணன்

ஆழ்வார்களுக்குள் நான்காம் ஆழ்வாரான திருமழிசை ஆழ்வாரை உறையிலிடாதவர் என்றருளிச் செய்கிறார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். உருவின கத்தியை உறையிலிடாமல் எங்கும் ஸேவை ஸாதிப்பவர் திருமங்கையாழ்வாரே தவிர திருமழிசை ஆழ்வார் அல்லர். ஆனால் நாயனார் திருமழிசை ஆழ்வாரை உறையிலிடாதவர் என்று அருளிச் செய்ததற்குக் காரணம் என்ன என்பதை விளக்கும் மணவாள மாமுனிகள், "உருவினவாள் உறையிலாடாதே ஆதிமத்யாந்தம் தேவதாந்தர அவரத்வ ப்ரதிபாதந பூர்வகமாக பகவத் பரத்வத்தை பபாதிக்கும் திருமழிசைப்பிரான்" என்றருளிச் செய்கிறார். இதன்படி, மற்றையாழ்வார்களைக் காட்டிலும் ஸ்ரீமந்நாராயணனுடைய மேன்மையை நன்றாக வற்புறுத்திக் கூறியுள்ளவர் திருமழிசை ஆழ்வாரே என்பது புலப்படுகிறது. இப்படி அவர் உறையிலிடாதவராக இருப்பதற்குக் காரணம் என்ன? மற்றையாழ்வார்கள் எம்பெருமானாலே மயர்வற மதிநலமருளப் பெற்று ஆழ்வார்களாக ஆனவர்கள். ஆனால் திருமழிசை ஆழ்வாரோ, முதலாழ்வார்களுள் ஒருவரான பேயாழ்வாரால் திருத்திப்பணி கொள்ளப்பட்டு ஆழ்வாராக ஆனவர். எம்பெருமானால் அருளப் பெற்றவர்களைக் காட்டிலும் ஆசார்யனால் அருளப் பெற்றவர் தெளிந்த ஞானம் படைத்தவராகத் திகழ்வர் என்பதற்குத் திருமழிசைப் பிரானே எடுத்துக்காட்டு. அதனால் தான் அவரை, 'துய்யமதி பெற்ற மழிசைப்பிரான்' என்று குறிப்பிடுகின்றார் மணவாள மாமுனிகள்.

முனிவர் குமாரராகப் பிறந்து பிரம்பன் குடியில் வளர்ந்தவரான திருமழிசை ஆழ்வார் பற்பல மதங்களிலும் புகுந்து ஆராய்ச்சி செய்து அம்மதங்களில் ஊன்றியிருந்தார். முடிவில் சைவமதத்திலும் அப்படியே ஊன்றிக்கிடந்த அவரைத் திருத்திப்பணி கொள்ள நினைத்த பேயாழ்வார் சில செடிகளைத் தலைகீழாக நட்டு, அறுந்த தாம்பும் ஓட்டைக் குடமும் கொண்டு கிணற்றிலிருந்து நீர் எடுத்து வார்க்க முற்பட்டார். இதைக்கண்ட திருமழிசையார், 'இந்த ஓட்டைக் குடத்தில் எப்படி நீர் தண்ணீர் எடுத்து ஊற்ற முடியும்? அதுவும் தலைகீழாக நட்டுள்ள செடி எப்படி முளைக்கும்!" என்று பரிகசிக்க, "நீர் பற்றியிருக்கின்ற தெய்வங்கள் பலன் கொடுக்கும்போது இந்தச் செடியும் முளைக்கும்" என்று கூறினார். அப்போதுதான் திருமழிசையாரும் உண்மையை உணர்ந்து கொண்டார். பேயாழ்வாரும் ஸ்ரீமந் நாராயணனே முழுமுதற்கடவுள் என்பதை திருமழிசையார் நெஞ்சில் படும்படி பதேசித்தார்.

**அலரெடுத்த ந்தியான் ஆங்கெழிலாய**
**மலரெடுத்த மாமேனிமாயன் - அலரெடுத்த**
**வண்ணத்தான் மாமலரான் வார்சடையானென்றிவர்கட்**
**கெண்ணத்தானாமோவிமை. (மூன்றாம் திருவந்தாதி 97)**

'இந்திரன், பிரமன், சிவன் ஆகியவர்கட்கு நெஞ்சால் நினைப்பதற்கும் அரியன் திருமால்' என்ற தம்முடைய கருத்தைத் திருமழிசைப்பிரானின் திருவுள்ளத்தில் விதைத்தார். உடனே திருமழிசைப்பிரானும் தெளிவடைந்து அப்போதே பரம வைஷ்ணவராக மாறினார்.

இப்படி முதலில் சைவராக இருந்து பேயாழ்வாருடைய கடாக்ஷத்தால் வைஷ்ணவராக மாறியதால், திருமழிசை ஆழ்வார் ஸ்ரீமந் நாராயணனுடைய மேன்மையையும், மற்ற தேவதைகளுடைய கீழ்மையையும் ஸ்பஷ்டமாகவே காட்டுகிறார். முதலில் சைவ ஸம்ப்ரதாயத்திலும் சில நாள் இருந்தவர் என்பதால் அத்தேவதைகளுடைய சரித்திரத்தை யும் நன்றாகவே எடுத்துக்காட்டி எள்ளி நகையாடுகிறார்.

**காணிலுமுருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார்**
**பேணிலும் வரந்தர மிடுக்கில்லாத தேவரை**
**ஆணமென்றடைந்து வாழுமாதர்கள்! எம்மாதிபால்**
**பேணிநும் பிறப்பெனும் பிணக்கறுக்க கிற்றிரே.**

என்பது திருமழிசை ஆழ்வாருடைய திருவாக்கு.

பிறதேவதைகள் காண்பதற்கு இனிய உருவத்தை யுடைவர்களுமல்லர். கேட்பதற்கு இனிய சரித்திரத்தை யுடையவர்களுமல்லர். இவற்றைப் பொருட்படுத்தாமல் அவர்களைச் சரணடைந்தாலும் நாம் கேட்கின்ற வரங்களைக் கொடுக்கும் சக்தியுடையவர்களுமல்லர் என்கிறார் திருமழிசைப்பிரான். இப்படி ஒரு தேவதை வரம் கொடுக்க முடியாமல் போன நிகழ்ச்சியொன்று திருமழிசைப் பிரானுடைய வாழ்க்கையிலேயே இடம் பெற்றிருக்கின்றது. பொதுவாக ஆழ்வார்களுடைய வாழ்க்கை வரலாறு பூர்வாசார்யர்களுடைய வ்யாக்யானங்களில் இடம் பெறுவதில்லை. ஆனால் திருமழிசையாழ்வாருடைய வாழ்க்கையில் நடந்த இந்த நிகழ்ச்சியை மட்டும் நம்பிள்ளை தமது விரிவுரையில் ஓரிடத்தில் (ஈடு 4–10–7) மிகவும் விரிவாகவே விளக்கியிருக்கிறார் என்பதைக் கொண்டே இந்த நிகழ்ச்சியின் முக்கியத்வத்தை நாம் உணரலாம்:

**பகவத் ஸமாச்ரயணம் பண்ணி ஜ்ஞாநாதிகரா யிருப்பார் ஒருவரிருந்து தம்முடைய வஸ்த்ரத்தைப் புரையா நின்றாராய், அவ்வளவிலே தேவனும் தேவியுமாகப் போகா நிற்க அநாதரித்திருந்தாராய், தேவியானவள், 'நீர் ஸர்வாதிகராயிருக்க உம்மைக் கண்டவிடத்தில் இவன் அநாதரித்துக் காலை நீட்டிக் கொண்டிருந்தானே' என்ன, 'அதுதான் இருக்கிறபடி அறிவோம்' என்று இருவரும் இவர் பக்கலிலே வந்து, "நீயென்? தேவர்களை மநுஷ்யர்கள் கண்டால் அநுவர்த்தித்து வேண்டும் வரங்களும் வேண்டிக் கொள்ளக் கடவர்களா யிருப்பர்கள். நீ நம்மைக் கண்டவிடத்தில் நீட்டின காலை முடக்குதல், சில உபசாரங்களைப் பண்ணுதல் சிலவற்றை வேண்டிக் கொள்ளுதல் செய்யாதே இருந்தாயீ!" என்ன, "அழகிது, அவையெல்லாம் செய்யக் கடவேன்; மோக்ஷம் தரலாமோ" என்ன, "அது நம்மாலே செய்யலாம தன்று; பகவத் ஸமாச்ரயணம் பண்ணி அவன் ப்ரஸாதத்தாலே பெறவேணும்" என்ன, "ஆகில் இன்று சாவாரை நாளை சாவப் பண்ணலாமோ?" என்ன, "அதுவும் கர்மாநுகுணமாயிறே யிருப்பது, நம்மால் செய்யப்போகாது" என்ன, "ஆகில் நீ செய்யுமது இவ்வூசி போன வழியே நூலும் போம்படி அநுக்ரஹித்து நடக்குமித்தனை" என்ன, தேவனும் கோபத்தாலே நெற்றியில் கண்ணைக் காட்ட, இவரும் காலில் அனேகங் கண்ணை உண்டாக்கிக் காட்டினார்.**

இதே சரித்திரத்தை மிகவும் சுருக்கமாகப் பெரியவாச்சான்பிள்ளையும் குறிப்பிடுகிறார்.

**ருத்ரனும் தேவியும் போகநிற்க, பகவத் ப்ரவணனாயிருப்பானொருவன் அவர்களை அநாதரித்துத் தன் வஸ்த்ரத்தைக் குத்தினான் என்கிறத்தை நினைப்பது.**

பேயாழ்வாரால் திருத்திப் பணிகொள்ளப்பட்டு எம்பெருமானாலே மயர்வறமதிநலமருளப் பெற்ற இவ்வாழ்வார் சிவபெருமானைக் குறித்து இவ்வாறு நடந்து கொண்டதை தம்முடைய திவ்யப் பிரபந்தத்திலும் குறிப்பாகக் காட்டுகிறார்.

மற்றுத் தொழுவார் ஒருவரையும் யானின்மை
கற்றைச் சடையான் கரிக்கண்டாய் - எற்றைக்கும்
கண்டுகொள் கண்டாய் கடல்வண்ணா யானுன்னைக்
கண்டு கொள்கிற்குமாறு. (நான்முகன் திருவந்தாதி 26)

'கடல்வண்ணனே! உன்னைத் தவிர நான் வேறு எந்த தெய்வத்தையும் தொழாதவன் என்பதற்கு சிவபெருமானே சாட்சியாவான். இப்படி உன் ஒருவனையே தொழும் அடியேன் என்றைக்கும் உன்னையே வணங்குபவனாக இருக்கும்படி அருளவேண்டும்' என்று பிரார்த்திக்கிறார்.

இவ்வாழ்வாருடைய ஆசாரியரான பேயாழ்வார் திருவேங்கடமலையில் எழுந்தருளி யிருக்கும் எம்பெருமானை பாடும்போது

தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் - சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேலெந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாயிசைந்து. (மூன்றாம் திருவந்தாதி 63)

என்றருளிச் செய்கிறார். இதைத் தவறாகப் புரிந்து கொள்ளும் சிலர் இப்போது திருவேங்கடமலையில் எழுந்தருளியிருப்பவன் இரண்டுருவும் ஒன்றாக

இசைத்துக் கொண்டு எழுந்தருளியிருப்பதாக கருதுகின்றனர். ஆனால் இப்பாசுரத்தின் உண்மைப்பொருளை விளக்குகின்ற பெரியவாச்சான்பிள்ளை,

**ஸித்தமான வேஷத்தையும் ஸாதகமான வேஷத்தையும் ஒக்கதரிப்பதே! இதொரு சீலவத்தையே! என்கிறார். (தாழ்சடை இத்யாதி) சூழும் திரண்டருவி பாயா நின்ற திருமலைமேலே நிற்கிற என்னுடைய ஸ்வாமிக்கு (இரண்டுருவும் ஒன்றாயிசைந்து) ஒன்று ஸாதகமாய் ஒன்று ஸித்தமானால் சேராச்சேர்த்தியாக இருக்குமோ வென்னில் இரண்டுருவும் இசைந்து ஒன்றாயிருக்கும்- பொருந்தியிருக்கும்**

என்றருளிச் செய்துள்ளது கவனிக்கத்தக்கது. இதன்படி எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் சிவபிரானுக்கும் அந்தர்யாமியாக இருக்கின்றபடியால் அவனையும் தனக்குச் சரீரமாகவே (உடலாகவே) கொண்டவன்; நீண்முடியும் சக்கரமும், பொன்னாணுமான தன்னுடைய திவ்யமங்களத் திருமேனியை உடையவனாக இருக்கும்போதும் சரி, தாழ்சடையும் ஒண்மழுவும், சூழரவுமுடைய சிவபெருமானைத் தனக்கு சரீரமாகக் கொண்டிருக்கும்போதும் சரி, இரண்டுமே அவனுக்குப் பொருத்தமாகவே உள்ளது என்றுதான் பேயாழ்வார் இப்பாசுரத்தில் குறிப்பிடுகின்றார் என்பது வியாக்யான சக்ரவர்த்தியின் விளக்கம். இப்பாசுரத்தைத் தவறாகப் புரிந்து கொள்ளும் சிலர் எம்பெருமானுடைய திருமேனியின் பாதிபாகத்தில் சிவபெருமானும் எப்போதும் உறைகின்றான் என்று கூறுவது முற்றிலும் தவறாகும். இதைப் பேயாழ்வாருடைய சீடரான திருமழிசையாழ்வார் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார்.

ஆறுசடைக்கரந்தான் அண்டர்கோன் தன்னோடும்
கூறுடையனென்பதுவும் கொள்கைத்தே! (நான். திருவ. 4)

கங்கை நீரைத் தலையில் தரித்துக் கொண்டிருக்கும் சிவன், எம்பெருமானுக்குச் சமமானவன் என்று கூறுவதும் ஒப்புக் கொள்ளத் தக்கதோ? என்று கேட்கிறார் திருமழிசையாழ்வார்.

இங்கு சிவனை 'ஆறு சடைக்கரந்தான்' என்று கங்கைநீரைத் தலையில் தரித்தவனாக அவர் குறிப்பிட்டது கருத்தாழம் மிக்கதாகும். இதை அவரே மற்றொரு பாசுரத்தில் விவரிக்கிறார்:

குறைகொண்டு நான்முகன் குண்டிகை நீர்ப்பெய்து
மறை கொண்ட மந்திரத்தால் வாழ்த்தி - கறைகொண்ட
கண்டத்தான் சென்னிமேலறக் கழுவினான்
அண்டத்தான் சேவடியையாங்கு. (நான். திருவ. 9)

உலகளந்த எம்பெருமானுடைய திருவடிகளை நீராலே விளக்கிய பிரமன், அந்தப் புனித நீரானது சிவனுடைய தலையிலே விழும்படியாகச் செய்தான். தறுதலைகளான பிள்ளைகளைத் திருத்துவதற்காக பாகவதர்களுடைய ஸ்ரீபாததீர்த்தத்தை அவர்கள் தலையிலே தெளிப்பது போல, சிவனுடைய தலையில் எம்பெருமானுடைய ஸ்ரீபாத தீர்த்ததைத் தெளித்தான் பிரமன்; அப்படி ஸ்ரீபாத தீர்த்தத்தைத் தலையிலே தரித்துள்ள சிவன், பகவானுக்குச் சமமானவன் என்று கூறுவதும் ஒப்புக்கொள்ளத் தக்கதோ? என்று திருமழிசையாழ்வார் கேட்கிறார்.

சிவனே தன்னுடைய சீடர்களான நால்வர்க்கு எம்பெருமானைப் பற்றி உபதேசித்ததை ஒரு பாசுரத்தில் கூறுகிறார்.

ஆலநிழற்கீழ் அறநெறியை நால்வர்க்கு
மேலையுகத்துரைத்தான் மெய்த்தவத்தோன் ஞாலம்
அளந்தானை ஆழிக்கிடந்தானை ஆல்மேல்
வளர்ந்தானைத் தான் வணங்குமாறு. (நான். திருவ. 17)

மெய்யான தவநெறியை உடையவனான சிவன், உலகளந்தவனும், பாற்கடலில் உறைபவனும், ஆலிலையில் பள்ளிகொண்டவனுமான பெருமானைத் தான் வழிபடும் முறையாகிய நல்வழியை முன் யுகத்தில் ஓர் ஆலமரத்தின் நிழலில் இருந்து கொண்டு அகஸ்த்யர், புலஸ்த்யர், தக்ஷர், மார்க்கண்டேயர் ஆகிய முனிவர்கள் நால்வர்க்கு உபதேசித்தான் என்று புராண வரலாற்றை எடுத்துக் காட்டுகிறார் திருமழிசையாழ்வார்.

மற்றெந்த ஆழ்வாரும் கூறாத சரித்திரம் ஒன்றை திருமழிசையாழ்வார் கூறுகின்றார்:

கண்டு வணங்கினார்க்கென்னாங்கொல்? காமனுடல்
கொண்டதவத்தார்க் குமையுணர்த்த - வண்டலம்பும்
தாரலங்கல் நீண்முடியான் தன்பெயரே கேட்டிருந்து அங்
காரலங்கலானமையாலாய்ந்து. (நான். திருவ.78)

ஒரு சமயம் சிவன் ஸ்ரீமந்நாராயணனைக் குறித்து தியானம் செய்து கொண்டிருக்கையில் பார்வதியானவள் ''நீர் யாரைக்குறித்து தியானம் செய்கிறீர்?'' என்று கேட்டாளாம். உடனே ''ஸ்ரீமந்நாராயணனைக் குறித்துத் தான்'' என்று சொல்ல நினைத்து, அந்தத் திருநாமத்தை நினைத்த மாத்திரத்திலேயே சிவனுக்கு உடலுருகி மெய்தளர்ந்து குரல் தழுத்தொழிந்ததாம். இப்படி பகவானுடைய திருநாமத்தை மனத்தால் நினைத்த மாத்திரத்திலேயே சிவனுக்கு இப்படி ஏற்பட்டதென்றால், அந்த பகவானை நேரே காண்பவர்கள் எப்படி ஆவர்களோ? என்கிறார் திருமழிசையாழ்வார். இதனால் ஸ்ரீமந்நாராயணன் மீது அளவற்ற பக்தி கொண்டவன் சிவன் என்பது புலப்படுகிறது. அப்படிப்பட்ட பகவத்பக்தனை நாமும் வணங்கினால் தவறென்ன சிலர் என்று கேட்கலாம். இதற்குக் கூரத்தாழ்வான் எனும் ஆசார்யர் அளித்த விடையாவது: ''எங்கள் பூர்வர்கள் தேவதாந்தர பஜனம் பண்ணாமையாலே'', என்பதுதான்.

ஸத்வகுணம் தலையெடுக்கும்போது தன்னை ஸ்ரீமந்நாராயணனுடைய பரமபக்தனாக நினைக்கும் சிவன், ரஜோகுண, தமோகுணங்கள் தலையெடுக்கும் போது தன்னையே பரம்பொருளாகவும் கருதிக் கொண்டு விடுகிறான். இதை உண்மையென்று நம்பி அவனையும் சிலர் வணங்கவே அவனுக்கு அஹங்கார மேற்பட்டு, ஸ்ரீமந் நாராயணனோடு எதிரிடவும் முற்படுகிறான். அதனால் தான் ஸ்ரீவைஷ்ணவர்கள் இதர தேவதைகளை வணங்குவதில்லை. அதனாற்றான் திருமழிசையாழ்வாரும்,

**பொல்லாத தேவரை தேவரல்லாரை திருவில்லாத்**
**தேவரைத் தேறேல்மின் தேவு. (நான். திருவ. 53)**

என்று திருமகள் கேள்வனைத் தவிர வேறு எவரையும் தெய்வங்களாகவே நினைக்க வேண்டாம் என்று உபதேசிக்கிறார்.

முதலாழ்வார்கள் அநுபாவ்ய வஸ்துவை நிஷ்கர்ஷிக்க அதுக்குக் களைபிடுங்குகிறார் (திருமழிசை ஆழ்வார்). என்றருளிச் செய்கிறார் பெரியவாச்சான்பிள்ளை. அதாவது முதலாழ்வார்கள் ஸ்ரீமந்நாராயணனே பரம்பொருள் என்று நிலைநாட்டி, நாம் அனுபவிக்கத்தக்கவன் அவனே என்று காட்டினர்; அம்முதலாழ்வார்களுள் ஒருவரான பேயாழ்வாரால் துய்யமதிபெற்ற மழிசைப்பிரான், அவ்வனுபவமாகிற பயிருக்குக் களைபிடுங்குகிறார். அதாவது பிற தேவதைகள் பரம் பொருளல்லர் என்பதை நிலை நாட்டுகிறார்.

**நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்**
**தான்முகமாய் சங்கரனைத் தான் படைத்தான் (நான்.திருவ.1)**

பிரம்மாவால் படைக்கப் பட்டவன்தான் சிவன்; அந்த பிரம்மாவையும் படைத்தவன் நாராயணன் என்று தம்முடைய திவ்யப்பிரபந்தத்தைத் தொடங்கும் போதே அழுத்தம் திருத்தமாகப் பறைசாற்றுகிறார்.

'பொல்லாத தேவரைத் தேவரல்லாரைத் திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவு' –என்று காண்பதற்கினிய வடிவுமில்லாமலும், கிட்டினாலும் பலன் கொடுக்கும் சக்தியில்லாமலும் இருக்கின்ற திருவில்லாத் தேவர்களை தெய்வங்களாகவே நினையாதீர்கள் என்று தம்முடைய பிரபந்தத்தின் நடுவில் கூறியருளுகிறார்.

**இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்**
**இனியறிந்தேன் எம்பெருமானுன்னை - இனியறிந்தேன்**
**காரணன் நீ கற்றவை நீ கற்பவை நீ நற்கிரிசை**
**நாரணன் நீ நன்கறிந்தேன். (நான். திருவ. 96)**

என்று சிவனுக்கும் நான்முகனுக்கும் தெய்வம் நீயே என்றும் எல்லாவற்றுக்கும் காரணமும் நீயே என்றும் நன்றாக அறிந்து கொண்டேன் என்று எம்பெருமானை நோக்கிக் கூறித் தம்முடைய பிரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்.

ஆக, முதலாழ்வார்களில் ஒருவரான பேயாழ்வாருடைய கடாக்ஷத்தாலே பரம வைஷ்ணவராய்த் துய்யமதி பெற்றவரான திருமழிசையாழ்வார் தம்முடைய திவ்யப் பிரபந்தமான நான்முகன் திருவந்தாதி நெடுகிலும், குறிப்பாக ஆதிமத்ய அந்தங்களில் (முதல்–நடுவு–முடிவு) பரத்வ ஸ்தாபனம் பண்ணி, மற்ற தெய்வங்கள் பரதேவதைகள் அல்லர் என்று நிலைநாட்டுகின்ற படியால் இவரை உறையிலிடாதவர் என்கின்றனர் பூர்வாசார்யர்கள். இப்படி இவரை உறையிலிடாதவர் ஆக்கிய பெருமை பேயாழ்வாரையே சாரும்.